273—

மண்ணிவாக்கம் கிராமத்திற்குக் குடிநீர்.

*10819—திரு. ம. தனபால் :

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

திருப்போரூர் தொகுதி, காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றிய மண்ணிவாக்கம் கிராமத்தில் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருப்போரூர் தொகுதியிலுள்ள காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த மண்ணிவாக்கம் கிராமத்தில் 3 திறந்த வெளிக் கிணறுகள் மற்றும் 4 கையிறைப்பான்கள் மூலம் பொது மக்களின் குடிநீர்த் தேவை பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது.

திரு. ம. தனபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களை எல்லாம் வாழ வைத்துக்கொண்டிருக்கிற இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு தமிழகத்தினுடைய முதல்வராக பொறுப்பேற்ற பிறகுதான் கிராமப் புறங்களிலே, உள்ளாட்சித் துறையிலே ஒரு விரைவான விரிவான வளர்ச்சியை, குறிப்பாக ஆதிதிராவிடர் பகுதிகளிலே காண முடிகிறது. அப்படிப்பட்ட ஒரு ஆட்சியில் இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தச் சொன்னதிலே கையிறைப்பான்கள் பழுதுபட்டிருக்கிற ஒரு நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. இரண்டு கையிறைப்பான்கள் பழுது அடைந்திருக்கின்ற ஒரு நிலையிருக்கிறது. அதே போன்று நமது புரட்சித் தலைவி ஆட்சியிலே தான் குடிநீர் பிரச்சினை எந்த கிராமங்களிலேயும் இல்லையென்ற ஒரு சூழ்நிலை உருவாகிக்கொண்டிருக்கிறது எந்தப் பகுதியிலேயும் கிணற்றிலேயிருந்து தண்ணீர் இறைக்கின்ற ஒரு நிலைமையை எங்கள் இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் எவருக்கும் வைத்ததில்லை. அப்படிப்பட்ட ஒரு நிலையில் இந்தப் பகுதியில் பரிசீலனை செய்து மீண்டும் ஒரு ஓ.எச்.டி. அமைத்துத் தர வழிவகை செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகின்ற 1993-94 ஆம் ஆண்டில் நிச்சயமாக இந்தக் கையிறைப்பான்கள் பழுது பார்க்கப்பட்டு ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டு பூர்த்திச் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.